## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – ஆகஸ்ட் 7 அன்று

# முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் - அமைதிப் பேரணி!

## ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 5 –

'முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளையொட்டி ஆகஸ்ட் 7 காலை 7 மணியளவில் கழகத் தலைவர் – தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி சென்னை – அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில்அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். இதில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்றிடுமாறு சென்னை கிழக்கு – சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு சென்னை மேற்கு – சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணி யன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக , கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக – இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும்,



திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", ஆகஸ்ட்7, வியாழக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.

இதில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணியினரும் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## 'உயர்நீதிமன்ற நீதிபதி பதவியில் பெண் வழக்கறிஞர்களுக்கு, வாய்ப்புகளை அதிகரியுங்கள்'

### ஒன்றிய சட்ட அமைச்சரிடம், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. மனு!

புதுடெல்லி, ஆக.5-

சென்னை உயர்நீதிமன்ற பெண் வழக்கறிஞர்கள் சங்கத்தின தலைவி ரேவதி தலைமையில் துணைத்தலைவி ராஜலட்சுமி, செயலாளர் பர்வீன் உள்ளிட்டோர், கடந்த வாரம் டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியனை சந்தித்து, கோரிக்கை மனு ஒன்றினை அளித்தனர். அந்த மனுவில், தங்களது சங்கத்தில் ஏறக்குறைய 4 ஆயிரம் பெண் வழக்கறிஞர்கள் இருப்பதாக தெரிவித்த அவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில், அனுமதிக்கப்பட்ட 75 நீதிபதி பணியிடங்களில், 12 பெண் நீதிபதிகள் மட்டுமே உள்ளதாகவும், இவர்களில் 6 பேர் மட்டுமே வழக்கறிஞர் பணியில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டதாகவும் கூறி, நீதிபதி பணியில்



பெண்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கவும், வழக்கறிஞர் பணியில் உள்ளவர்களுக்கு அதில் அதிக பிரதிநிதித்துவம் அளிக்கவும், ஒன்றிய அரசை வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (4-8-2025) , தமிழச்சி தங்கபாண்டியன், எம். பி, மாண்புமிகு. ஒன்றிய சட்டத்துறை அமைச்சர். திரு. அர்ஜுன் ராம் மெக்வாலை சந்தித்து, இந்த கோரிக்கையை வலியுறுத்தி மனு அளித்தார். பெண் வழக்கறிஞர்களின் இந்த கோரிக்கை, தமிழ்நாட்டிற்கு மட்டும் உரிய கவலை அல்ல, நாடு முழுவதும் உள்ளது என தெரிவித்த அவர், தேசிய அளவில், உயர்நீதிமன்ற நீதிபதிகளில், சுமார் 14 சதவீதம் மட்டுமே பெண்கள் இருப்பதாக சமீபத்திய புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டினார். வழக்கறிஞர் பணியிலிருந்து, உயர்நீதிமன்ற நீதிபதிகளாக உயர்த்தப்படுபவர் குறைவு என்பதையும் நினைவூட்டினார். மேலும் தமிழகத்தின் திராவிட மாடல் அரசு அனைத்து துறைகளிலும் சமத்துவத்தை வலியுறுத்துவதை எடுத்துரைத்த தமிழச்சி தங்கபாண்டியன், இந்த கோரிக்கையை முறையாக பரிசீலிக்க வேண்டும் என்று ஒன்றிய அமைச்சரிடம் அளித்த மனுவில் கோரியுள்ளார்.

## உரிமைகளுக்காக திறக்காத கதவுகளை உடைக்கவும் நெஞ்சுரத்தோடு போராடுகிறது!

# கலைஞர் வழித்தடத்தில் நடக்கும் தி.மு.க. அரசுக்கு தடைக்கற்கள் கூட படிக்கட்டுகள்தான்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஆக, 5-

உரிமைகளுக்காக திறக்காத கதவுகளை உடைக்கவும் நெஞ்சுரத்தோடு போராடுகிறது, கலைஞர் கட்டமைத்த வழித்தடத்தில் நடக்கும் 'திராவிடமாடல்' அரசுக்கு தடைகற்கள் கூட படிக்கட்டுகள் தான் என 'தினகரன்' நாளேடுதலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

"வீரன் சாவதே இல்லை. கோழை வாழ்வதே இல்லை" என்றார் கலைஞர். கடந்த 4 ஆண்டுகளாக திராவிட மாடல் ஆட்சியில் ஒன்றிய அரசுக்கு எதிராக தி.மு.க. வின் ஒவ்வொரு போராட்டங்களும் அந்த வகையில் வீரனுக்குரிய வீரியத்தை வெளிப்படுத்துகின்றன. தமிழைக் காக்கவும், தமிழ்நாட்டைக் காக்கவும், மாநில உரிமைகளை காக்கவும் இன்று இந்தியாவிலே ஒன்றிய அரசிடம் முட்டி மோதுகிற முன்னணி மாநிலமாகத் தமிழகமே உள்ளது. மாநில உரிமைகளை காக்கிற உணர்வு இன்று, நேற்றல்ல, ஆண்டாண்டு காலமாக திராவிட மண்ணில் ஊறிக் கிடக்கிறது. ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தில் தலைமைச் செயலகத்தில் மாநில முதல்வர்கள் தேசிய கொடியேற்றும் உரிமையை முதன்முதலில் பெற்று தந்தவர் கலைஞர். அவரது வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் இன்று மாநில உரிமைகளை காப்பதிலும், அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இழந்துவிட்ட உரிமைகளை மீட்பதிலும் தனிக் கவனம் செலுத்தி வருகிறார்.

நீட் தேர்வு, உதய் மின்திட்டம், சொத்து வரிவிதிப்பு உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ. அரசின் சதித் திட்டங்களுக்கு முந்தைய அ.தி.மு.க. அரசு துணைபோனது. இன்று அவற்றிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் வலுவான குரல் எழுப்புவதோடு, தமிழ்நாட்டின் உரிமைகளை காத்திட சட்டப் போராட்டத்தையும் தொடர்ந்து நடத்தி வருகின்றன. ஒன்றிய பா.ஜ. அரசு தன்னால் ஆட்சிக்கு வர முடியாத மாநிலங்களில் எல்லாம் கவர்னர்கள் கையில் பிரம்பைக் கொடுத்து சட்டாம்பிள்ளைத்தனம் செய்து வருகிறது. கவர்னர்கள் ஆடுகிற ஆட்டம், அவர்கள் ஏதோ மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் போலவும், வானளாவிய அதிகாரம் தங்களுக்கு இருப்பது போலவும் ஜனநாயகப் படுகொலைகளை நடத்தி வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கவர்னரோ இன்று வரை தனி ராஜாங்கம் செய்வதிலே குறியாக இருக்கிறார்.

கவர்னருக்கு கடிவாளம் போட திராவிட மாடல் அரசு சட்டப் போராட்டம் நடத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசே அதிகாரமிக்கது என்கிற சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பானது, இன்று தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் நம்பிக்கையை ஊட்டுகிறது. இந்தியாவின் முதல் செம்மொழி என்கிற அந்தஸ்தை பெற்றுள்ள தமிழ்மொழிக்கு ஒன்றிய அரசு அளிக்கும் நிதி மிகக் குறைந்ததாகும். ஆனால் சமஸ்கிருத மொழிக்கு ஆயிரக்கணக்கான கோடிகளை ஒன்றிய அரசு அள்ளிக் கொடுக்கிறது. இந்தி அல்லாத மாநிலங்களில் தேசிய கல்விக்கொள்கையை காரணம் காட்டி இந்தி மொழியை திணிக்க ஒன்றிய அரசு துடிக்கிறது. சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக் கிடைக்கும் கல்வியை பறிக்கிற வகையில், குலக்கல்வி முறையை மீண்டும் கொண்டுவர துடிக்கின்றனர்.




தமிழின் தொன்மை மற்றும் பண்பாட்டையுமே ஒன்றிய அரசு ஏற்றுக் கொள்வதாக இல்லை. தமிழர் பண்பாட்டு அடையாளமான கீழடி அகழாய்வு முடிவுகளை ஒன்றிய அரசு இன்னமும் வெளியிட மறுத்து வருகிறது.

இத்தனை போராட்டங்களுக்கு மத்தியிலும், தமிழ்நாட்டைக் காக்கவும், தமிழ் மொழியை காக்கவும், நம் உரிமைகளை காக்கவும் திராவிட மாடல் அரசு உறுதியான, தெளிவான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. தமிழ்நாட்டை ஒன்றிய ஆட்சியாளர்களுக்கு அ.தி.மு.க. போன்று அடிமை சாசனம் எழுதிக் கொடுத்திடாமல், ஒவ்வொரு உரிமைக்கும் கதவை தட்டுவதோடு, திறக்காத கதவுகளை உடைக்கவும் நெஞ்சுரத்தோடு போராடுகிறது தி.மு.க. அரசு. கலைஞர் கட்டமைத்த வழித்தடத்தில் நடக்கும் இந்த அரசுக்கு தடைகற்கள் கூட நிச்சயம் படிக்கட்டுகளாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டது.

## சென்னை வடக்கு மாவட்ட பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டம் பகுதி செயலாளர்கள் கூட்டம் 05-08-2025 செவ்வாய்க்கிழமை (இன்று) காலை 9.00 மணியளவில் எண்.1, சர்மா நகர் 1-வது மெயின் ரோட்டில் உள்ள (எனது அலுவலகத்தில்) மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொருள்: 07-08-2025அன்று நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணி

கழக ஆக்கப்பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## 1000 பேருக்கு உணவு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

# சைதை மேற்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 7-ஆம் ஆண்டு நினைவு நாள்!

### எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஏற்பாட்டில் – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.- துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஆக.5-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆகஸ்டு மாதம் 7-ஆம் தேதி (வியாழக்கிழமை) அன்று 7-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், சைதை கிழக்கு பகுதி செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணைசெயலாளர் எம்.எஸ். ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி. ஜானகிராமன், ஆகியோர் முன்னிலையிலும், வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன், ஆகியோர் வரவேற்பில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் நண்பகல் 12 மணியளவில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, 1000 பேருக்கு உணவினை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர் ஆர். கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர். ரவி, பால்கார்ரவி, பொன் ஜெய்சிங், ஜி.பாபு, த.மணி, ஆர்.எல்.காந்தன், பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ஜிம் க.பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா. வெங்கடேசன், எஸ்.பரத்குமார், எம்.அருண், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ். ரவிச்சந்திரன், என்.சம்மந்தம், ஆட்டோ தியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், கேபிள்காளி, தீ.ராஜ்குமார், திடீர் நகர் தாஸ், தீனதயாளன், அ.தமீம்அன்சாரி, வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ.கிஷோர்குமார், பி.ஆர். துரைராஜ், ஆர்எஸ்டி.சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர்.ஜி.ஸ்டாலின், எம். ஜி.மதிவாணன், கவி.தமிழ் வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

## தியாகராயர்நகர் கிழக்கு - மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர்கள் ஜெ .கருணாநிதி எம்.எல்.ஏ – கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!

சென்னை, ஆக .5 -

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ , தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (05.08.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 7 மணியளவில், அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம், பவர் ஹவுஸ், கோடம்பாக்கத்தில் தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 07.08.2025 வியாழக்கிழமை, தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் பேரணி மற்றும் கழக ஆக்க பணிகள் .

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## மாதவரம் 17வது வட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை!

### பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் நடைபெற்றது!

மாதவரம், ஆக. 5-

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் உள்ள பெருமாள் கோயில் தெரு பிள்ளையார் கோயில் தெரு ஆகிய இடங்களில் வசிக்கக் கூடிய பொது மக்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நடைபெறும் ஓரணியில் தமிழ்நாடு எனும் முன்னெடுப்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

பெருமாள் கோயில் தெரு மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் பொதுமக்களிடம் மற்றும் குடும்ப தலைவிகளிடம் திமுக அரசின் சாதனைகளான மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம், நம்மை காக்கும் 48, இல்லம்தேடி கல்வி,, காலை உணவு திட்டம் போன்றவற்றை எடுத்துச் சொல்லி 17 ஆவது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி.மூர்த்தி, சி. பாலாஜி, வி. பார்த்தசாரதி, திவாகர், வக்கீல் எம். என். தளபதி மற்றும் திமுகவினர் உறுப்பினர் சேர்த்து வருகின்றனர் .

குடும்பத் தலைவிகளும் மிகவும் ஆர்வமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் தொடர்ந்து செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும் என்று தங்களை ஆர்வமாக திமுகவில் உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டம், வடபெரும்பாக்கம் பகுதியில் உள்ள பெருமாள் கோயில் தெரு பிள்ளையார் கோயில் தெரு ஆகிய இடங்களில் வசிக்கக்கூடிய பொது மக்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நடைபெறும் ஓரணியில் தமிழ்நாடு எனும் முன்னெடுப்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். 'நடிப்பிசைப்புலவர்' என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.

தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

"பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**